# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No.69/2022 |
| Prosecution Witness | : | **அ.சா.4** |
| Name | : | **லட்சுமணன் (உதவி இயக்குநர் கூட்டுறவு துறை) (ஓய்வு)** |
| Father's / Husband Name | : | **ராமசாமி** |
| Address | : | **திருமானூர், அரியலூர் மாவட்டம்** |
| Age | : | 66/2025 |

**தேதி : 23.06.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் பெரம்பலூர் கூட்டுறவு சார்பதிவாளர் உதவி இயக்குநர் (பால் தனிக்கை) பணியாற்றி 30.04.2017ம் தேதி ஓய்வு பெற்றேன். நான் 2013ல் பெரம்பலூரை தலைமை இடமாக கொண்டு பால் கூட்டுறவு தனிக்கை துறையில் உதவி இயக்குநராக பதவியில் இருந்தபோது எனக்கு கீழ் தனிக்கையாளர் பணியிடம் காலியாக இருந்ததால் உதவி இயக்குநராகிய நானே 2012-2013ம் நிதியாண்டிற்கான இறுதி தனிக்கை அறிக்கையினை TRD931 நூத்தப்பூர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில் 11.11.2013ல் நேரடியாக தணிக்கை செய்தேன். மேற்படி சங்கத்தில் பராமரிக்கப்படவேண்டிய 1. பொதுபேரேடு, 2. பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதி பேரேடு 3. பணியாளர்களின் பணி பதிவேடு, 4. பணியாளர்களின் கடன் மற்றும் முன்கடன் நிலுவை பதிவேடு, 5. கொடுப்படவேண்டிய மற்றும் வரவேண்டிய நிலுவை பதிவேடு, 6. தளவாடங்களின் இருப்பு பதிவேடு, 7. தீவனம் இருப்பு பதிவேடு, 8. தாதுஉப்பு இருப்பு பதிவேடு, 9. FSS இருப்பு பதிவேடு, 10. பால் உபபொருள்இருப்பு

பதிவேடு மற்றும் தணிக்கை குறைகள் நிவர்த்தி பதிவேடு ஆகியவை மேற்படி சங்கத்தில் இல்லாத நிலையில் சங்கத்தில் இருந்த நாள்வழிபதிவேடு, பால்கொள்முதல் பதிவேடு, பால்பணம் பட்டுவாடா பதிவேடு, ஒன்றியத்திற்கு பால் விற்பனை செய்ததற்கான பில்கள்மற்றும் ரசீது புத்தகம், செலவு சீட்டுகள் ஆகியவற்றை கொண்டு பரிசீலனை மேற்கொள்ளப்பட்டதில் குறைபாடுகள் காணப்பட்டது.

அந்த குறைபாடுகளை என்னுடைய தணிக்கை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன். இதுகுறித்து தனி அறிக்கையாக மண்டல துணை இயக்குநர் அவர்களுக்கு 31.07.2014ல் இறுதி தணிக்கை அறிக்கை மற்றும் தனி அறிக்கை ஆகியவற்றை சமர்ப்பித்துள்ளேன். மேற்படி தனி அறிக்கையின்படி சங்கத்தில் ஏற்பட்ட முறைகேடுகளால் ஏற்பட்ட இழப்பானது ரூ.5,21,136.55/- என குறிப்பிட்டுள்ளேன். அ.சா.ஆ-31 இறுதி தணிக்கை ஆவணத்தில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். முறைகேடுகள் குறித்து வணிக குற்றப்பிரிவு போலீஸார் வழக்கு பதிவு செய்து ஆகஸ்ட் மாதம் 2020ல் என்னை சாட்சியாக விசாரித்தார்கள்.**31.07.2014 தேதியிட்ட தனி அறிக்கை படிவம் அ.சா.ஆ.35 ஆகவும், 31.07.2014 தேதியிட்ட தனி அறிக்கை அ.சா.ஆ.36 ஆகவும் C.C.No. 63/2022 வழக்கில் குறியீடு செய்யப்பட்டுள்ளது.**

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.